[10th September 1960

வைக்கக்கூடிய யோசனைகளை இந்த சபையின் முன்பு விவாதத்திற்கு வைத்த பிறகு அவர்களுக்கு அனுப்பப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : This question does not arise from the main question.

Sugarcane (cultivation)

*601 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் உள்விவகார அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் ஜில்லாவிலே 1960-ம் வருடத்திலே எத்தனை ஏக்கராக்களிலே கரும்பு பயிரிடப்பட்டிருக்கிறது?

(ஆ) "Sugarcane Development" திட்டத்தின்கீழ் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்ட உதவிகளின் விவரங்கள் யாவை?

(இ) எத்தனை டன் இரசாயன உரம் விசேஷ சலுகைமீது எந்தெந்த தாலுக்காக்களிலுள்ள விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) About 26,340 acres.

(*b*) Under Sugarcane Development Scheme (i) a subsidy at 24 nP. is being paid to the ryots for the transport of cane setts per maund for distances up to six miles and 50 nP. per maund for distance exceeding six miles.

(ii) Premium at the rate of Rs. 10 per 100 maunds over and above the basic price as per local rates is being paid to the nurserymen as an incentive to produce good seed material.

(iii) Manurial demonstration plots are laid out under the supervision of the departmental staff to impress upon the ryots the need for applying optimum dosages of nitrogen and a sum of Rs. 50 is paid as subsidy for each plot.

(iv) Pesticides and Fungicides are sold at half cost to the Sugarcane crops throughout the year.

(*c*) The details of taluk-wise distribution of fertilisers are not available.

SRI P. G. MANICKAM : கோயம்புத்தூர் ஜில்லா கோபிசெட்டிபாளையம் தாலூகாவில் கரும்பு அதிகமாகச் சாகுபடி செய்யப்படுகிறது. ஆகையால் அங்கே ஒரு சர்க்கரை ஆலையை ஏற்படுத்த வேண்டுமென்று சர்க்காரால் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. அதையும் இந்த போர்டு மூலம் ஏற்படுத்துவதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சர்க்கார் உத்தரவு அனுப்புமா?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதைப்பற்றி உத்தரவு அனுப்புவதற்கில்லை. இந்தக் கோரிக்கைகள் எல்லாம் அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.